1973 ஆகஸ்ட் 6]

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்த புள்ளிவிவரங்களில், வட ஆற்காடு மாவட்டத்திற்காக இதற்கு என்று குறைவான தொகைதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. மொத்தத் தொகையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சரிசமமாகப் பங்கிட்டு அளிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, எல்லா மாவட்டங்களிலும் சமமான அளவிற்குக் கோயில்களின் எண்ணிக்கை இல்லை என்பதை உறுப்பினர் அவர்கள் அறிவார்கள்.

திரு. அ. தேவேந்திரன்: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திற்கு 90 ஆயிரம் ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். அதிலே ராஜராஜேசுவரத்திற்கு ஏதாவது நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தனிக் கேள்வி போடவும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: இதிலே சுமார் 4 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தாலும்கூட, பாடல்பெற்ற பல கோயில்கள் பாழடைந்த நிலையிலே இருக்கின்றனவே, அதற்காக சட்டசபை அங்கத்தினர்கள் கொண்ட ஒரு உயர் மட்டக் குழுவை நியமித்து எந்த எந்தக் கோயில்களை உடனடியாகச் செப்பனிட வேண்டும், நிவாரணம் கொடுக்க வேண்டுமென்ற முடிவுகளை எடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, அப்படி கோயில்களெல்லாம் அதிகமாகப் பழுதடைந்திருந்தால் 1967-க்கு முன்னால் 2 இலட்சம் ரூபாய் மட்டும் கொடுத்த உதவியை இன்றைய தினம் 6 இலட்சம் ரூபாயாக அதிகப்படுத்தியிருக்கிறோம்.

மலைக்கோட்டைக் கோயிலுக்கு மின்சார இழுவை ரயில்.

* 50 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:**
திரு. என். கிட்டப்பா:
திரு. என். கே. பழனிசாமி: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மலைக்கோட்டை கோயிலுக்கு மின்சார இழுவை ரயில் துவக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: ஆம்.

[1973 ஆகஸ்ட் 6

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இதை எவ்வளவு ரூபாய் செலவில் போடுவதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளது? இந்த நிதியை யார் ஏற்றுக் கொள்கிறார்கள்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, சுமார் 5 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்தக் கோயிலின் நிதியும் அதற்கு உபயோகப்படுத்தப்பட விருக்கிறது. போதுமான நிதியில்லாமல் இருந்தால் பக்கத்துக் கோயில்களிலிருந்து உதவி செய்யப்படும்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இதற்கான பணி எப்பொழுது துவங்கப்படவிருக்கிறது என்பதை அறிய இயலுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, மின்சார இழுவை இரயில் ஏற்கனவே பழனி கோயிலில் அமைக்கப் பட்டுள்ளது. அந்த இரயிலைத் தயார் செய்த மின்சார வாரியத் திடம் இதுபற்றித் தொடர்பு கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கான விவரங்களை அவர்கள் சேகரித்து வருகிறார்கள். அவர்கள்மூலம் தான் இந்தப்பணி தொடங்கப்படவிருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, எப்பொழுது இந்தத் திட்டம் பூர்த்தியாகும் என்று உத்தேசிக்கப்பட்டிருக் கிறது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இதற்கான இயந்திரங்களையெல்லாம் அளிக்கும் பொறுப்பை மின்சாரத் துறை ஏற்றுக்கொண்டுள்ளது. அப்படி அளிக்கும் அந்தப் பொறுப்பை அவர்கள் பூர்த்தி செய்து கொடுத்தவுடன் வெகு சீக்கிரத்தில் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, சுமார் 1½ ஆண்டுக் காலத்தில் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1973 ஆகஸ்ட் 6]

திரு. இரா. மாணிக்கவாசகம் : தலைவரவர்களே, திருச்சி மலைக் கோட்டைக்கு இரயில் அமைப்பதைப்போன்று வேறு மலைக் கோயில்கள் எதற்காவது அமைக்கத் திட்டமிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, சேலம் மாவட்டம் திருச்செங்கோடு கோயிலிலும், இங்கே பக்கத்திலிருக்கின்ற திருக்கழுக்குன்றம் வேதபுரீஸ்வரர் கோயிலிலும் இதுபோல இரயிலைத் துவக்கும் எண்ணம் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. நடைமுறைக் கேள்விகள்.

(அ) அமைச்சரவை மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானத்திற்கு முன் ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்வது குறித்து.

DR. H. V. HANDE : On a point of Order, Sir. A couple of days ago as per the decisions in the Business Advisory Committee, after the No-confidence motion was moved the Hon. Speaker after listening to the views of the Hon. Chief Minister, gave an assurance that adjournment motions would be taken up and then he was good enough to take up the adjournment motion relating to Kanyakumari district last time. We were given to understand like that at that time ; in fact the Hon. Speaker announced " இப்பொழுது இன்றைக்கு இதை எடுத்துக்கொள்கிறேன். " (if you go through proceedings you would find the wording); we were given such an impression. The serious situation arising out of the farmers' agitation, the attack on Thiru V. P. Chintan and the situation arising out of burning of a generator in Ennore Thermal Scheme —